செ.வெ.எண்.05 நாள்.04.07.2017.

மாண்புமிகு. தமிழக முதலமைச்சர் அவர்கள் மக்களின் நலன் கருதி அற்புதமான **"அம்மாதிட்டம்" (AMMA – Assured Maximum Service to Marginal People in All Villages)** என்ற திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்கு பயணம்செய்து நீண்டநேரம் காத்திருந்து மனுக்களை அளிப்பதால் ஏற்படும் நேரம், செலவு மற்றும் பல்வேறு இன்னல்களை போக்குகின்ற வகையில் மக்கள் வசிக்கும் கிராமத்திற்கே வருவாய்த்துறை அலுவலர்கள் சென்று குறைகளை கேட்கும் வகையில் **"அம்மாதிட்டம்"** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், வாரம் ஒரு கிராமத்தில் **வெள்ளிக்கிழமை** அன்று வருவாய்த்துறை சார்பில் முகாமிட்டு, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து துறையைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்கும் வகையில் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு வருவாய் வட்டத்தில் மக்களைத் தேடி வருவாய்த்துறை மூலம் **"அம்மாதிட்டம்"** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 4-வது கட்ட **"அம்மாதிட்ட முகாம்"** திருநெல்வேலி, செங்கோட்டை தென்காசி, சிவகிரி, வீரகேரளம்புதூர், ஆலங்குளம், சேரன்மகாதேவி, பாளையங்கோட்டை, மானூர், திருவேங்கடம், இராதாபுரம், சங்கரன்கோவில், நான்குநேரி, அம்பாசமுத்திரம மற்றும் கடையநல்லூர் ஆகிய 15 வட்டங்களிலுள்ள அனைத்து கிராமங்களிலும் 4-வது கட்டத்திற்கானஅம்மாதிட்ட முகாம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதனை தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை 07.07.2017 அன்று கீழ்க்கண்ட கிராமங்கள் **"அம்மாதிட்டம்"** முகாம் நடைபெற தேர்வுசெய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | வட்டம் | குறுவட்டம் | வருவாய்கிராமம் |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | திருநெல்வேலி | சங்கன்திரடு |
| 2. | இராதாபுரம் | திசையன்விளை | கரைச்சுத்துபுதூர் |
| 3. | அம்பாசமுத்திரம் | ஆழ்வார்குறிச்சி | கீழ ஆம்பூர் |
| 4. | நான்குநேரி | ஏர்வாடி | சூரங்குடி |
| 5. | சேரன்மகாதேவி | சேரன்மகாதேவி | சேரன்கோவில்பத்து மற்றும் தெற்குகாருக்குறிச்சி |
| 6. | பாளையங்கோட்டை | முன்னீர்பள்ளம் | குன்றத்தூர் |
| 7. | மானூர் | தாழையூத்து | கானார்பட்டி |
| 8. | சங்கரன்கோவில் | கரிவலவந்தநல்லூர் | வாழவந்தாபுரம் |
| 9. | திருவேங்கடம் | பழங்கோட்டை | தெற்குகுருவிக்குளம் |
| 10. | தென்காசி | தென்காசி | மேலகரம் |
| 11. | செங்கோட்டை | பண்பொழி | தேன்பொத்தை |
| 12. | வீரகேரளம்புதூர் | சுரண்டை | ஜமீன் சுரண்டை |
| 13. | ஆலங்குளம் | வெங்கடாம்பட்டி | அஞ்சாங்கட்டளை |
| 14. | சிவகிரி | சிவகிரி | இராமநாதபுரம் |
| 15. | கடையநல்லூர் | ஆய்க்குடி | ஊர்மேல்அழகியான் |

மேற்கண்ட கிராமங்களில் **07.07.2017.** அன்று நடைபெறவுள்ள “அம்மாதிட்டத்தின்”போது பொதுமக்கள் கீழ்க்கண்ட தங்களது கோரிக்கைகள் தொடர்பாக மனுக்களைஅளிக்கலாம்.

**1.**இலவசவீட்டுமனைப் பட்டாக்கள், **2.** முதியோர் உதவித்தொகை உள்பட சமூகபாதுகாப்புத் திட்டங்கள், **3.**பட்டாமாறுதல்கள், **4.**உழவர் பாதுகாப்பு அட்டைகள், **5.**பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், **6.**சாதிசான்றிதழ்கள், **7.**இருப்பிடசான்றிதழ்கள், **8.**வருமானசான்றிதழ்கள், **9.**நிலத்தாவாக்கள் **10.**குடும்ப அட்டை,**11.** சாலைவசதிகள் மற்றும் குடிநீர் வசதி போன்றவைகள் தங்களது கிராமத்திற்கு கிடைத்திடும் வகையில், வருவாய்த்துறை மக்களுக்கு ஆற்றி வரும் சேவை துரிதப்படுத்தப்பட்டு மக்கள் பயனடைய இதன் மூலம் வழிவகை செய்யப்படுகிறது. எனவே, பொதுமக்கள் இம்முகாமில் தகுந்த ஆவணங்களுடன் தங்கள் கோரிக்கை குறித்த மனுக்களை அளித்துபயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.